மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அதுவும் இணைக்கப்பட்டிருக்கிறது.

Tuticorin Boat Owners Association.

* 336 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the decision of the Tuticorin Boat Owners Association to boycott handling of goods bound to Colombo ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : ஆம். ஆனால் இயல்பான படகுப் போக்குவரத்து அதன்பின் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

திரு கே. விநாயகம் : இந்தப் படகுச் சொந்தக்காரர்கள் எந்தக் காரணத்திற்காக சரக்குகளை ஏற்றுமதி செய்யமாட்டோம் என்று சொன்னார்கள் ? அப்போதுள்ள காரணங்கள் இப்போதும் இருக்கிறதா அல்லது அவை எல்லாம் நிவர்த்திக்கப்பட்டனவா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : கப்பலில் ஏற்றிச் சென்ற சில சாமான்கள் வெப்பதட்ப சூழ்நிலைக்கேற்ப அதில் இருப்பது அபாயம் என்று அந்தக் கப்பல் மாலுமி கருதியதால் அதிலுள்ள பொருள்களை கடலில் தூக்கி எறிந்துவிட்டார்கள். அப்படி எறிந்த பிறகு கப்பல் கொழும்பு போய் சேர்ந்தது. அங்கிருந்த சுங்க அதிகாரிகள் இந்தப் பொருள்களைக் கடலில் எறிந்தது குற்றம் என்று சொல்லி ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்கள். அதைக் கட்ட மறுத்து பிறகு அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது முடிந்த பிறகுதான் தெரியும்.

திரு எஸ். ஜே. ராமசாமி : அந்த வழக்கைப்பற்றிக் கூறினார்கள். அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ளதா அல்லது சிலோனில் போடப்பட்டுள்ளதா ? எந்த இடத்தில் எந்தச் சர்க்காரால் போடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்குள்ள வெளி விவகார இலாகா அதிகாரிகள் சுங்க இலாகா அதிகாரிகள் இவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எங்கு வழக்கு நடக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Electricity connection to agricultural pumpsets in Sowkiapuram village.

* 337 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications from the agriculturists of Sowkiapuram village in Santankulam Panchayat Union Council area in Tirunelveli district, pending grant of electricity connection to agricultural pumpsets ; and

(*b*) when electricity connection will be given for those applicants ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ) & (இ) சாத்தான்குளம், ஊராட்சி ஒன்றியக் குழுப் பகுதியிலுள்ள சௌக்கியபுரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கும்படி கேட்டு ஐந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. அருகிலுள்ள கிராமமாகிய அடுப்புவிளையிலிருந்து வந்த விண்ணப்பங்களையும் மேற்குறிப்பிட்ட விண்ணப்பங்களையும் சேர்த்து ஆதாயமுள்ள செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு 31-7-1968

1969 மார்ச் 14]

அன்று ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர்கள் மின்சக்தி வழங்கப்படுவதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதற்குட்பட்டு, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்கள் அவற்றின் முறைவைப்புப்படி வேலே மேற்கொள்ளப்படும்.

திரு டி. மார்டின் : சாத்தான்குளம் தொகுதி சௌக்கியாபுரத்தில் உள்ள விவசாயிகள் மின் இணைப்புக் கேட்கும்போது அதற்கு அருகாமையில் அதைச் சேர்ந்த கிராமங்களான கீழ் நடுவக்குறிச்சி, மேல் நடுவக்குறிச்சி, விஜயராகவபுரம் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் பம்ப் செட்களுக்கான கரண்ட் சப்ளைக்கு மனு போட்டு அவைகளும் இதோடு சேர்த்துப் பரிசீலிக்கப்பட்டதா ? அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : என் விடையிலேயே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தையும் சேர்த்துத்தான் கணக்கிடப்பட்டிருக்கிறது. வேறு கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்ததாகச் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு அ. லெ. சுப்பிரமணியம் : பொதுவாக திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1962-63ல் இருந்து அவர்கள் மனுச் செய்தும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகப் புகார் இருக்கிறது. சாத்தான் குளம் சப் தாலுகாவில் கருங்கடல் கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட 30 கிணறுகளுக்கு வேண்டி மனுச் செய்யப்பட்டும் இன்னும் லைன்கள் போடப் படாமல் இருக்கின்றன. இதை நான் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் மின் இணைப்புக் கொடுப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டை டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலும் கூறியிருக்கிறோம். ஆகவே இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் தவறு. சென்ற இரண்டு ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 50,000-க்கு மேற்பட்ட பம்ப் செட்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சித்தன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்னை பற்றிய அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்கத் தவறியமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சித்தன் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது— முற்பகல் 10.00

That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the Government to bring down the prices in hotels which has caused great deal of hardship to the public